பாரதியும் திருக்குறளும்

செ.திவான்

பாரதியும் திருக்குறளும்

ஆய்வறிஞர்
செ.திவான்

நூலாசிரியரின் 136-வது நூல்

நூலின் தலைப்பு	:	பாரதியும் திருக்குறளும்
பொருள்	:	வரலாறு - இலக்கியம்
நூலின் ஆசிரியர்	:	செ. திவான்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2022, மார்ச் 1
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	48
அச்சிட்டோர்	:	நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை
வடிவமைப்பு	:	J.R. Computers, 9489115236
விற்பனை உரிமை	:	நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ் 43, யூனிகார்ன் காம்ப்ளக்ஸ், குருவிக்காரன் சாலை, அண்ணாநகர், மதுரை - 625 020. போன் : 9080330200, 0452 4396667

ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002
போன்: 0462-2572665


சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ்மொழித் துறை
பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
முனைவர் ய. மணிகண்டன்
சொற்பொழிவாளர்:
திருமிகு. செ. திவான் அவர்கள்
ஆய்வறிஞர், திருநெல்வேலி.
பொருள்:
பாரதியும் திருக்குறளும்
நாள்: 22.02.2022 செவ்வாய்க்கிழமை நேரம் : முற்பகல் 11 மணி
இணைய இணைப்பு:

தொலைபேசி : 044 2844 9537

சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ்மொழித் துறை

முனைவர் ய. மணிகண்டன் மெரினா வளாகம்
பேராசிரியர் – தலைவர் சென்னை – 600 005

10.02.2022

பெறுநர்

திருமிகு. செ. திவான் அவர்கள்.
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை,
நெல்லை – 627 002.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு – தொடர்பாக.

தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் மிகச் சிறந்த ஆய்வுப் பங்களிப்புகளைத் தொடர்ந்து ஆற்றிவரும் தங்களைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையின் சார்பாக முதற்கண் பாராட்டி மகிழ்கின்றோம்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் இடம்பெற்றுள்ள பாரதியார் அறக்கட்டளையின் இவ்வாண்டுச் சொற்பொழிவினை நிகழ்த்திச் சிறப்பிக்குமாறு தங்களை அன்போடு அழைக்கின்றோம். 22.02.2022ஆம் நாள் முற்பகல் 11 மணிக்கு அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்ச்சியை அமைத்துக்கொள்ளலாம். இணைய வழியில் தாங்கள் உரையாற்றலாம்.

நன்றி.

தங்கள் அன்புள்ள,

(ய. மணிகண்டன்)

முனைவர் ய. மணிகண்டன்
பேராசிரியர் - தலைவர்
தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

பாரதியும் திருக்குறளும்

அகிலம் அதிர, அழகுறவும், ஆவேசத்துடனும் கவிதை, கதை, கட்டுரை தந்த சின்னச்சாமி பெற்ற தமிழின் பெரியசாமியாம் பாரதி பெயரால் அறக்கட்டளைப் பொழிவு.

1857 இல் இந்தியாவில் மூன்று பல்கலைக்கழகங்கள். அதில் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகம். 'பாரதி பாதை' யென்றாரே பேரறிஞர் அண்ணா அவர் துயிலுமிடத்தில் அலைகள் தாலாட்டும் கடலோரத்தில் அமைந்த சென்னைப் பல்கலைக்கழகத்தில் செங்கோட்டையில் பிறந்த விவசாயக் கூலி செய்யது மசூது பிள்ளையாய்ப் பிறந்த எளியேனுக்கும் சொற்பொழிவாற்றிடும் வாய்ப்பு.

எல்லாம் வல்ல இறைவனுக்கும்; காலத்திற்கும், துணைவேந்தருக்கும், தலைமைதாங்கிடும் தமிழ் மொழித்துறைத் தலைவர் **முனைவர் ய. மணிகண்டனுக்கும்,** வரவேற்புரை தந்த முனைவர் வே. நிர்மலர் செல்விக்கும் நன்றியுரை நவில இருக்கும் முனைவர் வாணி அறிவாளனுக்கும், ஜெ. ராதாகிருஷ்ணனுக்கும், துறையின் ஆய்வாளர்கள், மாணவர்கள், எனது துணைவியார் டாக்டர் திவானி, எனது பிரியமுள்ள பெயரன் ரெகான் சுலைமான், பெயர்த்தி ரயா என்ற காசினம்மாள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி முதலில்.

1914இல் 'இந்திய வரலாறு', 'இந்தியப் பொருளாதாரம்', 'ஒப்புமொழியியல்' என மூன்று துறைகள்; 1930இல் ஒப்புமொழியியல் துறைக்குப்பதிலாக, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், அரபி, பாரசீகம், உருது மொழித்துறைகள் உருவானது.

1980இல் தமிழ்த்துறையானது தமிழ் இலக்கியத்துறை, தமிழ் மொழித்துறை என இரண்டானது; பொன்விழாவை நோக்கி பீடு நடைபோடுகிறது.

ஸ்ரீமான் காந்தியின் கொள்கைகள்

'தராசு'இல் காளிதாஸனாக பாரதி இதே பிப்ரவரி 22இல் 1916இல் சுதேசமித்திரனில் 'அகிம்சை' வழியில் அறப்போர் நடத்திய **'ஸ்ரீமான் காந்தியின் கொள்கைகள்'** என்று எழுதினார். தில்லயாடி வள்ளியம்மை மறைந்தது 22.2.1914.

இரண்டு மகாகவிகள்

இன்று 22.2.2022 எல்லாமே இரண்டு.

இரண்டு மகாகவிகளைப்பற்றி உரை. கவிஞர் வாணிதாசன் 1915இல் பிறந்தது இதேநாளில்; உலக அன்னையர் தினம், சாரணர்தினம், செயின்லூசியாவின் சுதந்திரதினம். காசநோய்க்கு ஸ்ட்ரெப்டோமைசின் மருந்தை டாக்டர் செர்மன்வேக்ஸ்மான் Rutger பல்கலைக்கழகத்தில் கண்டுபிடித்ததினம் இன்று, ஆண்டிபயாட்டிக் என்ற சொற்றொடரை உருவாக்கியவரும் அவர்தான்.

சமுதாயத்தின் காசநோயைநீக்க ஸ்ட்ரெப்ரோமைசின், ஆண்டிபயாட்டிக் மருந்துகளைப்போல நீதிக்கருத்துக்களையும், விடுதலைக்கருத்துக்களையும் அறக்கருத்துக்களையும் அகிலத்திற்குத் தந்த இருபெரும் கவிகளைப்பற்றி சில சொல்ல இருக்கிறேன்.

'வாழ்க ! நீ எம்மான்'

'வாழ்க! நீ எம்மான்' என்று பாரதி போற்றினானே அந்த அண்ணல் காந்தியடிகளின் அருந்துணைவியர் அன்னை கஸ்தூரிபாய் சிறையில் 1944இல் மடிந்ததும் இதே பிப்ரவரி 22இல் தான். அமெரிக்காவின் முதன் ஜனாதிபதி ஜார்ஜ வாஷிங்டன் பிறந்ததும் கி.பி. 1732இல் இதே நாளில்தான்.

எனது பிரியத்திற்குரிய தலைவர் வங்கத்துச்சிங்கம் நேதாஜிக்கு இந்தியக் குடியரசுத்தலைவர் ஆர்.வெங்கட்ராமன் 1992இல் பாரதரத்னா விருது வழங்கியதும் இதேநாளில்தான்.

பாரதி ஆய்வுகள்

பாரதி புதையல் – ரா.அ. பத்மநாபன், 'பாரதி தமிழ்' பெ.தூரன், 'சின்னசங்கரன் கதை தந்த வி.ஜி.சீனிவாசன், 'சக்ரவர்த்தினி' முதல் பாரதிபடைப்புகளை கால வரிசைப்படுத்திய சீனிவிசுவநாதன், இந்திய இதழ் தொகுப்பு தந்த இளசை மணியன், டி.வி.எஸ்.மணி, சி.எஸ்.சுப்பிரமணியன், விஜயா கட்டுரைகள் 'பாரதி கருவூலம்' என பாரதிபடைப்புகுறித்த பல நூல் தந்த ஆ.இரா.வேங்கடாசலபதி, முனைவர் ய.மணிகண்டன், தெற்குப் பகுதியில் இருப்பதால் பாரதி குறித்த ஐந்து நூல்களை இதுவரை வெளியிட்டாலும்

பட்டியலில் இடம் பிடிக்காத அடியேன்; பாரதி குறித்து ஆய்வுகள் இன்னும் நிறைய வரவேண்டும்.

'பாரதி ஒரு கடல்'

'பாரதி ஒரு கடல்' வேண்டுவோருக்கு வேண்டுவன எல்லாம் அங்கு கிடைக்கும். ஆய்வுக்கு மட்டும் பாரதி பஞ் சமா வைக்கப்போகிறார். பாரதியை அணுகுவதற்கு நாம் சமைவாய் இருந்தால் பாரதி நம்மைமுன்வந்து வரவேற்றுச் சிந்தை துலங்கச் செய்வார் என்று சேக்கிழார் அடிப்பொடி டாக்டர் தி.ந.இராமச்சந்திரன் (டி.என்.ஆர்.) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் **'பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள்' (2002)** நூலில் சொல்லியவரிகள் நினைவிலாடுகிறது.

மகாகவி பாரதியை உலகக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு பல்வேறு ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன், மிஸ்ரீஸ் ஆங்கிலக் கவிஞர்கள் ஷெல்லி, பைரன், கீட்ஸ், வேர்ட்ஸ்வர்த்து பெல்ஜியக் கவிஞர் எமில் ஹரேன் போன்றவர்கள் பாரதியின் கவிதை வெறிக்கு தூபமிட்டவர்கள் என்று சொல்லும் முனைவர் க. கைலாசபதி 1962இல் 108 பக்கங்களில் ரவீந்திரநாத் தாகூரையும் பாரதியையும் ஒப்பிட்டு **'இரு மகாகவிகள்'** நூலைத் தந்தார்.

பாரதியும் ஷெல்லியும்

எனது பிரியத்திற்குரிய மறைந்த தொ.மு.சி, ரகுநாதன் எனும் திருச்சிற்றம்பலக் கவிராயர் 1964இல் 289 பக்கங்களில் **'பாரதியும் ஷெல்லியும்'** நூல்தந்தார்.

1970இல் 'The Impact of Western Thought on Bharathi' என்ற நூலைத்தந்தவர் வி. சச்சிதானந்தன், (இவரே 1982இல் Bharati and Whitman (விட்மன்) என்ற கட்டுரையும் தந்தார்)

1977இல் Studies in Comparative literature நூலைத் தந்த ஜி. ஜான்சாமுவேல், அதில் மகாகவி குமரன் ஆசானையும், ஷெல்லியையும் ஒப்பிட்டு எழுதியுள்ளார். 1980இல் 'ஷெல்லியும் பாரதியும் ஒருபுதிய பார்வை' எனும் 540 பக்கங்களைக் கொண்ட நூலினையும் அவரே தந்தார்.

திருச்சி அகில இந்திய வானொலியில் 'பாரதியும் பிறமொழிக் கவிஞர்களும்' என்ற தலைப்பில் இலக்கியப் பேருரை நிகழ்த்த அவரது உரை 'பாரதியும் கீட்சும்' எனும் நூலாக 1982இல் 57 பக்கங்களில் வந்தது.

'பாரதியார் உலககவி'

அதே ஆண்டில் '**பாரதியார் உலககவி**' எனும் நூலினை 146 பக்கங்களில் தந்த அண்ணன் மு. அப்துல் கறீம் பாரசீகக் கவிஞன் உமர் கய்யாம், உருதுக் கவிஞன் அல்லாமா இக்பால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு பாரதியை ஒப்பிட்டு மகிழ்ந்திருப்பார்.

பாரதியும் பாரதிதாசனும்

பாரதி என்றதும் நினைவிற்கு வருபவர் பாரதிதாசன் 1979இல் தனது முனைவர் பட்ட ஆய்வேடாக '**பாரதி – பாரதிதாசன் கவிதை மதிப்பீடு**' நூலினை 304 பக்கங்களிலும், 1980இல் '**பாரதியும் பாரதிதாசனும் ஒப்பியல் திறனாய்வு**' நூலினை 368 பக்கங்களிலும் தந்தவர் சி. கனக சபாபதி.

டாக்டர் சா. ஜெகத்ரட்சகன் 1982இல் 208 பக்கங்களில் '**பாரதியும் பாரதிதாசனும்**' நூல்தந்தார். அதே ஆண்டில் '**பாரதி வழியில் பாவேந்தர்**' எனும் கட்டுரை தந்த பாரதிதாசனின் புதல்வர் மன்னர் மன்னன் '**பாட்டுப் பறவைகள்**' நூலை கி.பி. 2000 இல் தந்தார். (356 பக்கங்கள்)

பாரதி – பாரதிதாசன்

டாக்டர் ச.சு. இளங்கோ 1982இல் 'பாரதிதாசன் பார்வையில் பாரதி' (234 பக்கங்கங்கள்) 1992இல் 'பாரதியாரோடு பத்தாண்டுகள் பாரதிதாசன்' நூலையும் தந்தார்.

திருக்கோயில் ஆசிரியர் ந.ரா. முருகவேள் **பாரதியும் கம்பரும்**, டாக்டர் ந. சஞ்சீவி **பாரதியும் இளங்கோவும்**, எம்.சோலையன் **பாரதியும் மில்டனும்**, ஏ.பி.சி. வீரபாகு '**பாரதியும் வ.உசி.யும்**', S.T. காசிராசன் '**Kamban and Bharati**' 1982இல் தமிழக அரசு தந்த பாரதி நூற்றாண்டு மலரில் கட்டுரைகள் யாத்துள்ளனர்.

1989இல், 141 பக்கங்களில் புலவர் ஆ. பழநி '**பாரதிதாசன் பாரதிக்குத்தாசனா?**' நூல் 141 பக்கங்களில் 1989இல் தந்திருக்கிறார். அதே ஆண்டில் '**பாரதி – பாரதிதாசன் ஒரு**

பார்வை' மா. செல்வராசனின் 175 பக்க நூலும் வந்தது. **'பாரதிதாசன் நோக்கில் பூவையர்'** 175 பக்க நூல் 1989இல் விஜயா ஆசிர் அம்மையார் தந்தது.

விடுதலைச்சிட்டும் புரட்சிக் குயிலும்

மூவேந்தர் முத்து பதிப்பித்த டி.என். சுகி சுப்பிரமணியனின் **'பாரதியாரும் பாவேந்தரும்'** 1990இல் வந்தது. **'விடுதலைச்சிட்டும் புரட்சிக் குயிலும்'** 1993இல் 173 பக்கங்களில் டாக்டர் கா.செல்லப்பன் வெளியிட்டநூல். தோழர் அருணன் 1994இல் **'முப்பெருங் கவிஞர்கள்'** 238 பக்க நூலில் பாட்டுக் கோட்டையாம் பட்டுக்கோட்டையையும் பாரதியும், பாரதிதாசனோடு இணைத்துக்கொண்டார். அதே ஆண்டில் **வ.உ.சி.யும் பாரதியும்** நூலை சலபதி தந்தார். (158 பக்கங்கள்) **பாரதி முதல் கைலாசபதி** வரை. கோ. கேசவன் 1998இல் ச.பாலசுந்தரத்தின் **பாரதி – பாரதிதாசன்** இருபெருங் கவிஞர்களை 2000இல் அடியேனின் **வ.உ.சி. கண்ட பாரதி.,** 2004இல் பாரதிதாசன் கவிதையில் பாரதியார் – ய.மணிகண்டன் 150 பக்கங்கள். பாரதி பாரதிதாசன் முதல் சந்திப்பு பற்றிய ஆய்வுடன் **'எழுக நீ புலவன்'** 2016 இல் சலபதி தொடர்கிறது.

மகாகவியும் மக்கள் கவியும்

நா. முத்துலக்கையன் 1986இல் 122 பக்கங்களில் 'பாரதியையும் மயாகோவஸ்கியையும் ஒப்பிட்டு, **'மகாகவியும் மக்கள் கவியும்'** அதே ஆண்டில் எட்டயபுரததின் வாரிசு பட்டுக்கோட்டை என்று சொல்லும் பழைய பாடலும் புதிய பார்வையும் எம்.பி.மணிவேலின் நூல் 83 பக்கங்களில்; மிதவாதிகளுக்கு டால்ஸ்டாயின் கடிதம் பாரதியின் நோக்கு (1978). ஸி.எஸ். சுப்பிரமணியம் 48 பக்கங்களில்.

1982இல் 'மீரா' தந்த **'பாரதியம்'** நூலில் பாரதி குறித்து ஆ.செகநாதனும் (சர்வதேசச் சிந்தனைகள்) பாரதி – வள்ளத்தோல் குறித்து சிற்பி பாலசுப்பிரமணியன் இந்திய ஆங்கில இலக்கியமும் பாரதியும் இந்திரன் கட்டுரைகளும் வெளிவந்தது.

எஸ். மணியும் – டாக்டர் சிவகாமசுந்தரியும் **'நமது பார்வையில் விவேகானந்தரும் – பாரதியும்'** நூலினை 1990இல் 78 பக்கங்களில் தந்தனர். 1997இல் வேதம்புதுப்பித்ததீரர் விவேகானந்தர் –

பாரதியார் நூலினை பேராசிரியர் கா.மீனாட்சி சுந்தரம் 136 பக்கங்களில் சொல்லியுள்ளார்.

பாரதியும் புஷ்கினும்

1992இல் **'பாரதியும் புஷ்கினும்'** நூலை கமலா பத்மகிரீஸ் வரன் 116 பக்கங்களில் தந்தார்

1998இல் முனைவர் ச. சுப்புரத்தினம் **'பாரதியாரும் அரவிந் தரும்'** 263 பக்கங்களைக் கொண்ட நூலைப்படைத்தார்.

2000இல் 'The Bhakticult in Tagore and Bharati' எனும் ஆங்கில நூலை டாக்டர் சி. ராஜேஸ்வரி 228 பக்கங்களில் தந்துள்ளார்.

1978இல் **'மகாகவி பாரதி ஒரு திறனாய்வு'** நூலைத்தந்த எஸ். விஜயபாரதி அதில் ஓரிடத்தில் வியாசரையும் பாரதியையும் ஒப்பிட்டு எழுதி உள்ளனர் (நூல் 248 பக்கங்கள்) 1965இல் **'வள்ளலாரும் பாரதியும்'** நூல் தந்தார் ம.பொ. சிவஞானம். அ. நலங்கிள்ளி **வள்ளலாரும் பாரதியாரும்** 168 பக்கங்களைக் கொண்ட நூலையும் 2005இல் 192 பக்கங்களைக் கொண்ட **'திருக்குறளும் திருவருட்பாவும்'**, முனைவர் இரா. கஸ்தூரிராஜாவும் நூல்கள் தந்துள்ளார்கள்.

பாரதியும் திரு.வி.க.வும் புயலும் தென்றலும்

அ. சவரிமுத்து அடிகளாரின் அணிந்துரையோடு திருநெல்வேலி T.V. சங்கரக் குமாரு 1983இல் **பாரதியும் திரு.வி.க.வும் புயலும் தென்றலும்** எனும் 68 பக்கங்களைக் கொண்ட நூலைத் தந்துள்ளார். பேராசிரியர் நா. சுப்பிரமணியன் "Robert frost and subramania Bharati' எனும் நூலை மதுரை காமராசர் பல்கலைக் கழக வெளியீடாக 1984இல் 190 பக்கங்களில் ஆங்கிலத்தில் சொல்லி மகிழ்ந்தார். எம். சோலையன் 1985 இல் **'பாரதியும் மில்டனும்'** நூலைத் தந்தார். சாமுவேல் தாசனின் **'பாரதியும் வள்ளத் தோளும் ஒப்பியல் பார்வை'** நூல் 408 பக்கங்களில் 1986இல் வந்தது.

பாரதியின் குயில் பாட்டும் கீட்சின் இலாமியாவும்

கே. செல்லப்பன் Tagore, Bharati and T.S. Eliot, Towards Creative unity 1987இல் தந்தது. 1988இல் சக்கர இலக்குமி காந்தனின் **'பாரதியின் குயில் பாட்டும் கீட்சின் இலாமியாவும்'** 144 பக்கங்களில்

வெளிவந்தது. டாக்டர் சிற்பி பால் சுப்பிரமணியம் தந்த, A Comparative study of Bharati and vallathol *1991 இல்* **ஆங்கிலத்தில்** *320 பக்கங்களில் வந்தது.*

பாரதியும் தமிழ்ப்புலவர்களும்

211 பக்கங்களில் 1981இல் **'பாரதியும் தமிழ்ப்புலவர்களும்'** *பெ.சு.மணி நூல்; அது 1995இல்* **'தமிழ்ப் புலவர் மரபும் பாரதி மரபும்'** *என்று 296 பக்கங்களாக விரிவடைந்தது. அதில் உ.வே. சா., விபுலானந்தருடன் பாரதி ஒப்பிடப்படுகிறார்.*

1952இல் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை **திருவள்ளுவரும் பரிமேலழகரும்** *1948இல் வள்ளுவர் – கம்பர் – இளங்கோ பற்றியும் எழுதியுள்ளார்.*

திருவள்ளுவரும் கம்பனும்

பி.ஸ்ரீ. ஆச்சாரியாவின் திருவள்ளுவரும் கம்பனும் கட்டுரையும் அதில் உண்டு 1970இல 96 பக்கங்களில் தந்த வள்ளுவரும் சாக்ரடீசும் மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழா மலரில் (205 பக்கங்களில்) பாலூர் கண்ணப்ப முதலியாரின் **'திருவள்ளுவரும் சேக்கிழாரும், சமயபுரம் நா.இரா. ஊரனின் திருக்குறளும் ஞானிகளும்** *வெளிவந்தது. அதில் திருமூலர், சுந்தரர், சிவப்பிரகாசர், சேரமான் பெருமாள், உய்யவந்ததேவநாயனார், உமாபதிசிவம், சீகாழி கண்ணுடைய வள்ளலார், திருவருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் ஆகியோருடன் திருவள்ளுவரை ஒப்பிட்டுள்ளார்.*

திருமுருக கிருபானந்தவாரியாரின் (1964 இல் 79 பக்கங்களில்) **காந்திமகானும் வள்ளுவரும்** *நூல் வந்தது. பேராசிரியர் பா. வளன்அரசு, நாடும் ஏடும், 1974, 116 பக்கங்கள் தாகூரையும் பாரதியையும் ஒப்பிட்டு மகிழ்கிறார்.*

இளம்பிறை மணிமாறன் 2004இல் 182 பக்கங்களில் 'உலக அரங்கில் திருவள்ளுவர்' பற்றி சொல்லியுள்ளார். **மார்க்ஸ்அரேலியஸ், ஆல்பர்ட் சுவைட்சர் பெர்னாட்ஷா** *ஆகியோருடன் வள்ளுவரை ஒப்பிட்டு மகிழ்கிறார்.*

'வள்ளுவரும் ஷேக்ஸ்பியரும் கூறும் சில நற்பண்புகள் ஓர் ஒப்புநோக்கு' 88 பக்கங்கள் பா. சூரிய நாராயணன் தந்தது.

தனிநாயக அடிகளார்

1980இல் மா.பொ.சி. 124 பக்கங்களில் திருவள்ளுவரையும் கார்ல்மாக்சையும் ஒப்பிடுகிறார். உலகத் தமிழ் மாநாடுகள் பல கண்ட தனிநாயக அடிகளார் 1961இல் கலைப்பூங்கா இதழில் வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க இயலும் கட்டுரை எழுதினார். The TiruKkural and the Greek Ethical Thought *என்று அது ஆங்கிலத்திலும் உள்ளது. தனிநாயக அடிகளின்* Complete works (II *தொகுதி) (766 பக்கங்கள்)*

1967இல் தனிநாயக அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைப் பொழிவு மூன்றைத் தந்தார். அதில் முதற்பொழிவு முற்சொன்னது. இரண்டாம் பொழிவு வள்ளுவரும் உரோமிய ஒழுக்கஇயலும், மூன்றாவது பொழிவு வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும் (தனியாக அடிகளாரின் படைப்புகள் 2013, 397 பக்கங்கள்; அதில் இவ்மூன்று உரைகளும் உள்ளது).

தந்தை பெரியார்

24.12.1929இல் திருக்குறளை எட்டணா (50 பைசா) விலைக்கு அச்சிட்டு மகிழ்ந்தார் தந்தை பெரியார். 14.3.1948 மயிலாப்பூரில் நடைபெற்ற திருவள்ளுவர் மாநாட்டில் 'திருக்குறளும் மனுதர்மமும்' என்றும் 24.10.1948 ஈரோடு மாநாட்டில் திருவள்ளுவர் படத்தை திறந்து வைத்து 'திருக்குறளும் திராவிடர் கழகமும்' என்றும் உரையாற்றியுள்ளார். 1983இல் திருக்குறளும் பெரியாரும் நூல் 96 பக்கங்களில் வந்துள்ளது.

1949இல் வள்ளுவர் காட்டிய வைதீகம் நூலை 56 பக்கங்களில் தந்தவர் சாமி சிதம்பரனார். அவரே 1956இல் வள்ளுவர் புகழ்பாடி 'வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்' 200 பக்கங்கள் கொண்ட நூலை நாட்டுக்குத் தந்துள்ளார்.

2006இல் புலவர் மு.முத்துக்கூத்தன் திருக்குறளில் அறத்துப்பாலில் பரிமேலழகரின் பார்ப்பனியத் திணிப்பு பற்றி 240 பக்க நூல் தந்துள்ளார்.

பாரதிப்பித்தர் எதிரொலி விசுவநாதன் 2014இல் 112 பக்கங்களில் தந்த நூல் 'பாரதியும் பரமசிவனும்' என்று சிவனைப்பற்றி பாரதி கூறியவைகளைத் தொகுத்துள்ளார்.

2019இல் கி.வீரமணி **பண்பாட்டுப்படையெடுப்பும் திருக்குறளும்** *நூலை 101 பக்கங்களில் சொல்லியுள்ளார்.*

முண்டாசுக்கவியும் முப்பாலும்

இனி முண்டாசுக்கவியும் முப்பாலும் ஆம்! **பாரதியும் திருக்குறளும்** *1966இல் வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளையும், ஜி. அங்கமுத்துவும்* **பாரதியார் பாராட்டிய மூவர்** *107 பக்கங்கள்; கலைமகள் காரியாலயத்திலிருந்து 162 பக்கங்களில் வெளிவந்த* **பாரதி பாடிய பாவலர்** *நூலில் பாரதியும் திருக்குறளும் பேசப்படுகிறது.*

பாரதியாரின் பாதையிலே

11.9.1974இல ம.பொ.சிவஞானம் (இவர் பாரதி குறித்து பல நூல்கள் தந்தவர்) **பாரதியாரின் பாதையிலே** *140 பக்கங்களை கொண்ட நூலில் முதற்கட்டுரை* **'தெய்வ வள்ளுவரும் தேசியக்கவி பாரதியும்'** *ஆகும்.*

1982இல் தமிழக அரசு வெளியிட்ட பாரதி நூற்றாண்டு மலரில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியன் தந்த கட்டுரை **வள்ளுவர் வழியில் பாரதி.**

வள்ளுவரும் பாரதியும்

வள்ளுவரும் பாரதியும் *தலைப்பில் எழுதிய தா.செ. இரகுபதி, தீ.இராமநுசம், வீரசுப்பிரமணியன்.*

வள்ளுவர் ஒளியில் பாரதி *– கோ.பார்த்தசாரதி*

பாரதி கவிதையில் வள்ளுவரின் செல்வாக்கு *– மு.பி. பாலசுப்பிரமணியன்*

குறள் வழி பாரதியார் *– பி.ஸ்ரீ,*

குறள் வழி *– டாக்டர் மு.வ.,*

தம்பாரதிப் புதிர் *– கருவை பழனிச்சாமி.*

பாரதி போற்றிய சான்றோர்கள்

2007 இல் **பாரதி போற்றிய சான்றோர்கள் சில பார்வைகள்** **நூலில் பாரதியும் திருவள்ளுவரும்** *என்ற டாக்டர் நல்லிகுப்பு செட்டியாரின் கட்டுரை.*

நாற்பதாண்டுகலாக நடத்திய ஆய்வுகளின் விளைவால் **'திருவள்ளுவரும் கன்பூசியசும்'** *தலைப்பில் சிறப்புப்*

பெற்ற பேராசிரியர் கு.மோகனராசு **தொல்காப்பியத்தையும், பகவத்கீதையையும், லூன்யூவையும்** வள்ளுவரோடு ஒப்பிட்டவர்.

3.5.1981 – வள்ளுவரும் பாரதியும்
13.12.1982 – பாரதியின் திருக்குறள் உரைகள் ஓர் பார்வை.
4.4.1983 – பாரதியார் கண்ட வள்ளுவர்
29, 30. 5.1983 – பாரதியாரின் திருக்குறள் உரைகள்
1987 – ஸ்ரீசுப்பிரமணிய கவிதா மண்டலம் திங்கள் இதழில் பாரதியார் படைப்புகளில் திருக்குறள்
1995 – பாரதியார் பார்வையில் திருவள்ளுவர் (96 பக்கங்கள்)
2015 – திருக்குறள் ஒப்பாய்வுத் தொகுதிகள்II நூலில் அதே நூலை திரும்பவும் பதிப்பித்தல்

பாரதியும் திருக்குறளும் தலைப்பில் இவ்வளவு இதுவரையில்; இவன் என்ன சொல்லப்போகிறான் புதிதாக?

வான்மறை

ஆகஸ்ட் 1910 இல் 'கனவு' பாரதி சொல்கிறான். **"தெய்வ வள்ளுவர் வான்மறை செய்ததும்" (25)** வள்ளுவரை சாமானிய மானிடவராகவன்றி **தெய்வப்பிறவியாக கருதிய** பாரதி, தெய்வ வள்ளுவர், என்னும் தொடரால் வெளிப்படுத்துகிறான். உத்தரவேதம், பொதுமறை, தமிழ்மறை இவைகளை உள்வாங்கிய பாரதி **'வான்மறை'** என்று புகழ்ந்து புதுப்பெயர் சூட்டுகிறார் குறளுக்கு.

நல்லறிஞர்

கணவர் உறங்கிய பின் உறங்கி அவர் விழிப்பதற்குள் விழித்து எழும் திருவள்ளுவரின் வாசுகி கதையை நம்பிய பாரதி

"வசிட்டனுக்கும் இராமற்கும் பின் ஒரு
வள்ளுவர்க்கு முன் வாய்த்திட்ட மாதர்போல் கனவு (31)
விண்ணகத்து அருந்ததியையும்,
மிதிலைச் செல்வி சீதையோடும்

வள்ளுவரின் வாசுகியைக் குறிப்பிட்டுப் பாடுகிறார் பாரதி.

அறமொன்றே தருமெய்யின்பமென் **நல்**
லறிஞர் தம்மையனு தினம் போற்றுவேன் கனவு (44)

இதில் நல்லறிஞர் என்று வள்ளுவரைக் குறிக்கிறார் பாரதி.

(கால வரிசையில் பாரதி பாடல்கள் 2012 பக்கம் 338)

வள்ளுவனைத் தந்த நாடு

1919 ஜூன் ஜூலையில் வெளிவந்த நாட்டுப்பாட்டு நூலில் பாரதி சொல்வான்

"கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

அதே நூலில் பிறிதொரு இடத்தில்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை"

என்று சொல்லிய தோடு நிறுத்திடாமல் பாரதி சொல்வான்.

ஊமையராய்ச், செவிடர்களாய்க் குருடர்களால் வாழ்கின்றோம், ஒரு சொற் கேளீர்! சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! ஊமையராய் என்று ஏன் சொன்னான். நாம் திருக்குறளைப் பேசாமல் இருக்கிறோம். நாம் நீதிநூலாம் திருக்குறளைப் பேச வேண்டும் என்பதற்காக! செவிடர்களாய் என்று ஏன் சொன்னான் சிலப்பதிகார இசையைக் கேட்க வேண்டுமென்பதற்காக குருடர்களாய் என்று ஏன் சொன்னான் கம்ப நாடகத்தைக் காண வேண்டும் என்பதற்காக என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

திருவள்ளுவர் மிது தனிப்பா எதுவும் தராத பாரதி தம் கவிதைகள் சில வற்றில் திருவள்ளுவரின் புலமைத் திறமையை எடுத்துக் காட்டிய இடங்களில் இதுவும் ஒன்று.

வான்புகழ்

திருக்குறள் உலக மொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகப் பெரும்புகழ் என்றும் பொருளிலேயே வான்புகழ் வாசகத்தைப் பயன்படுத்தியவர் பாரதி.

பாரதியின் புகழுரையில் மிகைப்பாடு எதுவும் இல்லை. வள்ளுவர் உலக அரங்கிலே வளர்ந்து நிற்கிறார் பாரதி மறைந்த பின்னர் தானே உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றன. தமிழகத்தில் உள்ள முப்பெரும் பல்கலைக்கழகங்களுக்கு மும்மூன்று இலட்ச ரூபாய்கள் தந்து திருக்குறள் ஆராய்ச்சி நடத்திடதிட்டமிட்டதும் பாரதி மறைந்த அரை நூற்றாண்டுக்குப் பின்புதானே நடந்தது. வள்ளுவர் புகழ் வளருந் தன்மையுடையது வளர்ச்சிக்கு எல்லையே இல்லை என்பதனை தீர்க்க தரிசனத்துடன் அன்றே வான்புகழ் என்றான் பாரதி.

தமிழச் சாதி

இருதலைக் கொள்ளியினிடையே **ஸ்வசரிதையும் பிற பாடல்களும்** 1937 முற்றுப் பெறாத பாரதி பாடல் அரசாங்கத் தலைப்பு **தமிழச் சாதி** பாடல்வரிகள் சில

"திருக்குறள் உறுதியும் தெளிவும், பொருளின்
ஆழமும் , விரிவும், அழகுங்கருதியும்...
முன்பு நான் தமிழச் சாதியை அமரத்தன்மை
வாய்ந்தது என்று உறுதிகொண்டிருந்தேன்.
திருக்குறள் உறுதி மரணமிலாப் பெருவாழ்வு ஆகும்
(வள்ளலாரும் இதனை உறுதிப்படுத்துகிறார்)

தமிழ்ச்சாதி அமரத் தன்மை வாய்ந்தது
கோடிக் கணக்கான தமிழ்ச்சாதி முழுவதுமே
மரணத்தை வென்ற தெய்வச் சாதியாக
வாழமுடியும் என்பது பாரதியின் நம்பிக்கை
அதனால் தான் அமரத்தன்மை வாய்ந்தது என்றான்.

கவிஞர்களில் திருவள்ளுவர் இளங்கோ கம்பன் இவர்களை உச்சி மேல் வைத்து மெச்சுகிறார் பாரதி.

அகத்தியர், தொல்காப்பியர், புறநானூற்றுப் பெண் பாற் புலவர்கள் ஔவையார் (இவரை அதிகமாகவே புகழ்ந்தவன் பாரதி) ஆண்டாள், நம்மாழ்வார், மாணிக்கவாசகர், தாயுமானவர், பட்டினத்தடிகள், திருநாவுக்கரசர், வள்ளல் இராமலிங்கர், கோபால கிருஷ்ண பாரதி, சித்தர்கள் என பலரையும் பல இடங்களில் பேசும் பாரதி வள்ளுவரையும் இளங்கோ அடிகளையும், கம்பனையும் மட்டும் குறிப்பிட்டு ஏன் பாடினான்?

மூன்று குலத்தமிழ் மன்னர் – என்னை
மூண்ட நல்லன் போடு நித்தம் வளர்த்தார் (27)
பாரதி தமிழ்த்தாய் நாட்டுப் பாட்டு 1919 என்று பாடிய பாரதி
சேர நாட்டிற்கு இளங்கோவையும்
சோழ நாட்டிற்கு கம்பரையும்
பாண்டிய நாட்டிற்கு வள்ளுவரையும் சொன்னார்.

இயல் தமிழுக்கு வள்ளுவர்
இசைத்தமிழுக்கு இளங்கோ அடிகளையும்
நாடகத்தமிழுக்கு கம்பர் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.

பங்கிம் சந்திரரை தெய்வப்புலவர் என அழைத்திடும் பாரதி வள்ளுவரையும் தெய்வப் புலவர் என்கிறார். பாரதியின் நண்பரான செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யும் தனது சுயசரிதையில் 'திருவள்ளுவரின் தெய்வமாமறையின் பெருவளக்குறள் சில பேணிப்படித்தேன்' என்பார் திருக்குறள் படியாதவர் எனது உறவுக்காரர் அல்ல என்றும் சொல்வார் வ.உ.சி.

பாரதி 1905 ஆகஸ்டில் 'சக்ரவர்த்தினி' இதழில் பணிபுரிந்தார் (1906 ஆகஸ்டிலிருந்து அப்பணியிலிருந்து விலகினார்) 13 இதழ்கள் வந்தது; சக்ரவர்த்தினி கட்டுரைகள், 112 பக்கங்களில் தனி நூலாகவும் வந்துள்ளது.

சக்ரவர்த்தியின் ஜீவ கீதம், ஜீவநாதம் இலட்சியக்கீதம் என்ன தெரியுமா?

"பெண்மையறிவுயரப் பீடுயரும், பெண்மைதான்
ஒண்மையுற வோங்கும் உலகு"

சக்ரவர்த்தினி

அறிவின் வளர்ச்சியினாலே பெண்மைக்குச் சிறப்புண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்த இடத்து அந்நாடு சிறப்படைவதாகும் என்பதையே தலையாய நோக்கமாகக் கொண்டு சக்ரவர்த்தினி இதழைநடத்தியவர் பாரதி.

மேலே சொன்ன குறள் திருவள்ளுவர் சொன்னதல்ல, பாரதி தானே எழுதிய திருக்குறள் ஆகும். எளியேன் சிந்தனையில் தோன்றிய இதுகுறித்து யாராவது முன்னர் சொல்லியுள்ளார்களா? என்று தேடினேன்.

இக்குறட்பாவைப் பாரதியே இயற்றியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது என்பார் சாகித்திய அகாதெமி விருதை 'பாரதி காலமும் கருத்தும்' நூலுக்காக பெற்ற தொ.மு.சி. ரகுநாதன். (நூல் 1986 பக்கம் 79)

பாரதி இக்குறள் ஒன்றினை மட்டும் எழுதினாரா? வேறு ஏதேனும் குறள் எழுதியுள்ளாரா? தேடினேன்.

பாரத குமாரிகள் ஜனவரி 1906 சக்ரவர்த்தினி பக்கம் 124-127.

பாரதாம்பிகையின் 'துக்க காரணம்'

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்
என்றார் வள்ளுவர்". மக்கட்பேறு 69

இது எத்தனை உண்மையோ அத்தனை இதன் எதிரிடை உண்மையாகும். புத்திரப் பேறு உண்டான காலத்தில் மாதாவுக்குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் அப்புத்திரன் சான்றோன் என்ற சொல்லைக் கேட்கும் போது அதிகமகிழ்ச்சி விளையுமாயின் மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப்படும் போது அத்தாய் மனம் அவன் இறக்கும் போது உண்டாகும் துயரத்தினும் அதிகத் துயரமடையுமல்லவா?

'மாயும் பொழுதிற் பெரிதழுங்குந்தன் மகனை
கீழோன் எனக் கேட்ட தாய்'

பாரத மாதாவும் இக்காரணத்தாலேயே துயர் அடைந்துநிற்கின்றாள் என்று கூறிய பாரதி தானே இயற்றிய இன்னொரு திருக்குறள் இது.

வள்ளுவரின் 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' குறளுக்கு மாற்றுக் குறள் தந்தபாரதி வள்ளுவர் குறளையும் மறந்திடவில்லை 20.3.1916 சுதேசமித்திரனில் கண்ணன் என் குழந்தை என்ற பாடலில்

மெச்சியுனை யூரார் புகழ்ந்தால்
மேனிசிலிர்க்கு தடீ

என்று பாடுகிறான்.

பரலி சு. நெல்லையப்பர்

இருவர் கண்ட பாரதி நூலில் (1982) எதிராலி விசுவநாதன் பக்கம் 45இல் தரும் தகவல்

'ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்லபல'
எனும் 337 வது குறள் (நிலையாமை அதிகாரம்)

பாரதி அடிக்கடி சொல்லி பரலி சு. நெல்லையப்பர் கேட்டது என்கிறார்.

பாரதியால்
ஒருமுறை பயன்படுத்தப்பட்ட குறள் 16

இரு முறை பயன்படுத்தப்பட்ட குறள் 6

மும்முறை பயன்படுத்தப்பட்ட குறள் 6 ஆக மொத்தம்

28 இடங்கள் என்பார் மோகனராசு.

இன்னும் ஆராய இதில் இடமுண்டு.

இன்னும் பாரதி எடுத்தாண்ட குறள்களுமுண்டு.

விக்டோரியா சக்கரவர்த்தினியின் சரித்திரத்திலிருந்து நமது நாட்டு மாதர்கள் அறியத்தக்க சில விஷயங்கள். சி. சுப்பரமணிய பாரதி சக்கரவர்த்தினி ஆகஸ்ட் 1905 பக்கம் 47 விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோ டேனையவர் (410 கல்லாமை)

இந்தக்குறள் தற்காலத்து ஆசாரத்திருத்தக்காரர்களில் ஒருவரால் இயற்றப்பட்டதன்று. தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்டது. படிப்பில்லாதவர்களையும் படித்தவர்களையும் ஒப்பிட்டு நோக்கினால் மிருகங்களையும் மனிதர்களையும் ஒப்பிடுவது போலு மென்கின்றார் வள்ளுவர்.

கல்வியற்றோர் ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் வண்டியிழுக்கத்தான் பயன்படுவார்களென்பது திருவள்ளுவ ருடைய கருத்து.

இதனை மீண்டும் பிறதோரிடத்திலே நினைவு படுத்துகிறார் 10.5.1917 இல் 'விளக்கு' சக்தி தாஸன் பாரதி தமிழ் பக்கம் 198 பெ. தூரன் 1953 விலங்கொடு குறளைச் சொல்லியபாரதி படியா தவனுக்கும் படித்தவனுக்கும் தார தம்யம் எத்தனை யென்றால் மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளத்தத்தனை என்கிறார்.

மாதரும் கல்வி பயில வேண்டும்

'ஓர் பஞ்சாபி மாது' சக்ரவர்த்தினி அக்டோபர் 1905 பக்கம் 49–55 மற்ற மாதரும் கல்வி பயில வேண்டுமென்பதில் இம்மாதிற் குள்ள ஆசை.

தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் (கல்வி 399)

என்று வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

சகஜந்தானே! என்கிறார் பாரதி. ஏன்? எனும் கட்டுரை; காளிதாஸன் புனைப் பெயரில் 1.11.1916 சுதேசமித்திரனில் எழுதுகிறார். படிப்பில்லாத ஜனங்கள் மிருங்களுக்கு ஸமானமென்று திருவள்ளுவர் பச்சைத் தமிழிலே சொல்கிறார். நமக்குள் எத்தனையோ புத்திமான்கள் இருந்தும் நம்மிலே முக்காற் பங்குக்கு மேலே மிருகங்களாக இருக்கும் அவமானத்தைத் தீர்க்க ஒருவழி பிறக்கவில்லையே ஏன்? எதனாலே? காரணந்தான் என்ன? என்கிறார் 1906 ஜனவரி சக்ரவர்த்தினியில் 'பாரத குமாரிகள்' என்ற தலைப்பிலே எழுதும்போது உணவு கொடுப்பது என்றால் வயிற்றுக்கு உணவு மட்டிலுமில்லை வள்ளுவரால் **'செவியுணவு'** என்று கூறப்படும் ஞான உணவு என்கிறார்.

செவிக்கு உணவு

செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்
(கேள்வி 411) இதுகுறள் அல்லவா!

'The language that is a kin to the sweet south wind' *'தென்றலுடன் பிறந்தபாஷை' இந்தியா 4.8.1906இல் சுதேசமித்திரனில் வெளிவந்த ஓர் பகுதியையும் டாக்டர் போப்பையும் பற்றித் தெரிவிக்கிறபோது திருக்குறள் திருவாசகம் பற்றி பாரதி குறிப்பிட்டுள்ளார்.*

இந்தியா 2.2.1907இல் கைத்தறி நெசவு Hand loom weaving *கட்டுரையில்,*

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
என்ற 423 அறிவுடைமை குறளைக் குறிப்பிடுகிறார் பாரதி,

இன்னும் நிர்ப்பந்தம்

Further Repression *'இந்தியா' 8.6.1907 பக்கம் 4 திருவள்ளுவர்*

'களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித் தாளைக் தீத்துரி இயற்று'

கள்ளுண்ணாமை 929.

என்று சொல்லி இருக்கிறார்.

அதாவது குடிவெறியிலே இருப்பவனோடு காரணங்கள் கூறி விவகாரம் செய்ய முயலுதல் நீரின் கீழ் மூழ்கியிருப்பவனை விளக்கைக் கொண்டு தேட முயல்வது போலாகும் என்று அர்த்தம் என்பது பாரதியின் குறள் உரை.

புராதனத் தமிழர்களின் (எண்ணம்) ராஜ்யம் அல்லது நாடு. The Ancient Tamil Conception of a State *இந்தியா 22.6.1907 பக்கம் 2,3 திருவள்ளுவர் சொல்லுகிறார் உறுபசியும் ஒவாப்பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு (நாடு. 734)*

இதன் பொருள் என்னவென்றால் அதிகமான பசியும் அதாவது பஞ்சங்களும் நீங்காத நோய்களும் அதாவது **'ப்ளேக், காலரா'** *முதலியவற்றைப் போன்ற விடாத இயல்பு கொண்ட*

தொத்து வியாதிகளும் , அழிவு செய்யும் விரோதிகளுமில்லாமல் விளங்கும் இயல்புடையதே ராஜ்யம் அல்லது நாடு என்று சொல்லத்தக்கதாகும். தற்கால நிலைக்கேற்ப பாரதி தந்த உரை இது.

நமது நாடு இந்நிலைமைக்கு வந்த காரணம் இன்னது என்பதைத் திருவள்ளுவ நாயனார் மற்றொரு குறளிலே வெகு நேர்த்தியாக எடுத்து விளக்கியிருக்கின்றார். அதை மற்றொரு முறை விவரிப்போம் என்று அக்கட்டுரையை முடித்துள்ளார் பாரதியார்.

உழவனின் உயர்வு

நீங்களும் நாசத்திற்கா வழி தேடுகிறீர்கள்? எனும் 2.5.1908 இந்தியா கட்டுரையில்

உலக வாழ்க்கையிலே உழுது பயிர்
செய்து வாழ்வதே மேலான வாழ்க்கை
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் (உழவு 1033)
என்று திருவள்ளுவர் கூறி இருக்கிறார்.

உலகத்தில் மற்றத் தொழிலில் அமர்ந்திருப்பவர் எல்லோரும் ஸேவகம் செய்து பிழைப்போரென வள்ளுவர் கூறியிருப்பதை நினைக்க நினைக்க என் மனதும் எனது வயலின்பால் போய்க் குடிகொண்டு விட்டது.

ருஷியாவிலுள்ள மேத்தா கட்சியாருக்கு டால்ஸ்டாய் என்ற ஞானி எழுதுவது என்று பாரதி 10.4.1909 முதல் 1.5.1909 வரை எழுதிய கட்டுரைகளில்,

டால்ஸ்டாயிற்கு எண்பதிற்கு மேல் வயதாகிவிட்டது தற்போது தமது செல்வத்தையும் பதவியையும் துறந்துவிட்டுத் தனியாகப் போய் ஜீவனம் செய்கிறார். **எவனேனும் ஒரு அரசனிடம் போயிருந்து இச்சகம் பேசி வாழ்வது இகழ்ச்சி என அறிந்து நெசவுத் தொழிலைக்கைக்கொண்ட நமது திருவள்ளுவ முனிவரைப் போன்றவர்** அவர் என்று புகழ்கிறார்.

2.5.1908 கட்டுரையில்

"குடிசெய்வல் என்று ஒருவற்குத் தெய்வம்
மடி தற்றுத்தான் முந்துறும்"

என்ற குடிசெயல்வகை 1023 குறளைக் குறிப்பிட்டுவிட்டு தெய்வத்திற்குப் பட்சபாதமில்லை நாம் முயற்சியுள்ளவர் களாயிருக்கும் பட்சத்திலே தெய்வம் நம்மோடேதான் சேர்ந்து நிற்கும் என்கிறார் பாரதி.

பஞ்சதந்திரவிளக்கம் இந்தியா 9.1.1909 பக்கம் 4

"அதர்மத்தைத் தர்மத்தாலும்
பகைமையை அன்பினாலும்
வெல்லவேண்டு மென்று"

புத்தர், திருவள்ளுவர், கிறிஸ்து முதலிய எண்ணற்ற பெரியோர்கள் சொல்வது மெய்தான்" என்று பாரதியார் திருவள்ளுவரைக் குறிப்பிடுகிறார்

10.4.1909 'இந்தியா' இதழில் 'ஜனஅபிவிருந்தியும் பொருள் நிலையும்' கட்டுரையின் இறுதியில் அறம் பொருள் இன்பம் என்றும் மூன்றில் பொருள் உள்ள தேசத்தார் மற்றை இரண்டையும் எளிதில் அடைவார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார் என்று குறிப்பிடுகிறார் பாரதி.

17.7.1909 இந்தியா இதழில் 'வைசிய குல விளக்கம்' எனும் நூல் புத்தகவரவு பகுதிக்கு வந்ததைக் குறிப்பிட்டுள்ள பாரதி திருக்குறள் ஈறாக உள்ள அநேக அரிய பெரிய நூல்களை யெல்லாம் நூலாசிரியர் எடுத்தாண்ட செய்தியைப் பதிவிடுகிறார் பாரதி.

மக்களின் மாட்சிமை

மக்களின் மாட்சிமை இந்தியா 31.7.1909 பக்கம் 3

எழுபிறப்பும் தீயவைதீண்டா பழிபிறங்காப்
பண்புடைய மக்கட் பெறின் (மக்கட்பேறு 62)

ஒருவர் குற்றமற்ற நற்குணங்களையுடைய புத்திரனைப் பெறு வாராயின் அவர் தானடையும் ஏழுவகைப் பிறவிகளிலும் துன்பமடைவதில்லை யென்று திருக்குறள் கூறுகின்றது.

கேவலம் புதல்வனைப் பெற்று விட்டதனாலேயே ஈன்றோர்க்குப் புகழ்ச்சியுண்டாவதில்லை. சத்புத்திரனையும் சன்மார்க்க வழியறிந்து நடப்பவனாயும் கண்டோர் புகழும் காருண்யமுள்ளவானயுமிருக்க வேண்டும். இதற்குப் பிரமாணம் இவ்வியாசத்தின் தொகுதியில் கூறப்பட்டுள்ள திருக்குறளேயாம் என்று விளக்கமளிக்கிறார் பாரதியார்.

மக்கள் மெய்தீண்டல் உடற் இன்பம் மற்றும் அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (மக்கட்பேறு 65)

உச்சி தனைமுகந்தால் கருவம் ஓங்கி வளருதடீ என்கிறார் பாரதி.

குழனினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்

(மக்கட் பேறு 66)

சொல்லும் மழலையிலே கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய் - பாரதி

பெருமவற்றுள் யாமறிவதும் இல்லைஅறிவறிந்த
மக்கட் பேறு அல்லபிற

(மக்கட் பேறு 61)

மார்பில் அணிவதற்கே உங்களைப்போல்
வைரமணிகள் உண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கு உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ?

என்று கண்ணம்மா என் குழந்தையில் பாரதி 20.3.1916இல் பாடுகிறார்.

மெய்யடியார்கள்

கர்மயோகி 1910 பிப்ரவரியில் பாரதி மெய்யடியார்கள் பற்றி குறிப்பிடும்போது,

அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை
வன்பாற்கண் மரம் தளிர்த்து அற்று

(அன்புடமை 78)

அன்பே நமது உயிர்
அதுவே இந்த உலகத்தில் சாசுவதமானது என்கிறார்.

ஒரே கட்டுரையில் ஐந்து திருக்குறள்கள்

13.2.1910 சூரியோதயம் இதழில் பாரதி 'கொடுங்கோன்மை' பற்றி எழுதுகிறபோது இன்று திருவள்ளுவ நாயனாருடைய உபதேசங்களை எடுத்துக் கொள்ளுகின்றோம் என்று ஒரே கட்டுரையில் ஐந்து திருக்குறள்கள் மேற் கோளாகத் தந்து அதற்குப் பொருளும் தருகிறார்.

"கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய் தொழுகும்போது" 551

கொலை செய்தவர்களைக் காட்டிலும் கொடியவனாகக் கருத வேண்டும் யாரை? குடிகளைத் துன்புறுத்துந் தொழில் மேற்கொண்டு தீயன செய்து வரும் அரசனை. இங்ஙனம் குடிகளைத் தொல்லைப்படுத்தும் ராஜாங்கம் நீடித்து நிற்காது நாள்தோறும் அழிந்து கொண்டே வரும்.

"நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்" 553

"கூழும் குடியும் ஒருங்கிழக்கும் – கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு" 554

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" 555

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின் 560

நாட்டிலே நடக்குந் தீமைகள் நாள் தோறும் ஆராய்ந்தறிந்து அதற்கேற்ப முறைமையைச் செய்யாத அரசன் நாள் தோறும் அந்நாட்டை இழந்து கொண்டு வருவான் (553)

பொய் சாஸ்திரங்கள் கூறுதல்

மேல் வருவதை எண்ணாமல் கொடுங்கோற் செய்கைகள் செய்து வரும் ராஜாங்கத்தார் தமது செல்வத்தையுங் குடிகளையும் ஒருங்கே வெகு சீக்கிரத்தலே இழந்து விடுவார்கள். 554

ராஜாங்கத்தார் செய்யுந் துன்பங்களைப் பொறுக்காத ஜனங்கள் சிந்துங் கண்ணீரே அந்த ராஜாங்கத்தின் செல்வத்தைத் யெல்லாம் நாசஞ் செய்யுங் கருவியாகக் கருதவேண்டும். 555

ஆளுவோர் ஆளும் தொழிலைவிட்டு வேலியே பயிரைத் தின்பதுபோல ஜனங்களை அழிக்க முயற்சி செய்து வருகின்ற நாட்டிலே இரண்டு முக்கிய அடையாளங்கள் காணப்படும்.பசு முதலிய பிராணிகள் ஸாரங்கெட்டுப்போய் விடும்.

பரம்பரையாய் அறிவுப் பயிற்சி செய்து கொண்டு வரும் ஜாதியார் உண்மையான சாஸ்திரப் பயிற்சிகளை மறந்து பொய்ச் சாஸ்திரங்கள் கூறி, ஜனங்களை ஏமாற்றத் தலைப்படுவார்கள் *என்று ஐந்து குறளுக்கும் உரைதந்தவர் பாரதி. பாரதி முழுத் திருக்குறளுக்கும் உரை எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்குமே என்று எண்ணினேன்.*

26.5.1917 விடுதலைக் கட்டுரையை சுதேசமித்திரனில் காளிதாஸன் பெயரில் தந்த பாரதி, துன்பப்பட்டார்; அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது அந்தத் துன்பமுண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெறியும் ஆயுதமாகும் என்கிறார்.

தராசு - காளிதாஸன்

சுதேசமித்திரன் 11.7.1917 தராசு கட்டுரையில் கடையை நெடு நாளாக மூடி வைத்துவிட்டேனென்றும் தராசுக் கடையை கட்டியாய் விட்டது போல் இருக்கிறதே என்று ராமராயர் சொன்னார் என்று துவங்கும்.

ஸ்வராஜ்யம் கேட்பது ராஜத்துரோகம் இல்லை

ஸ்வராஜ்யம் கேட்பது ராஜத்துரோகம் இல்லை என்று சொல்லிவிட்டு வேணு முதலிபாடுவார். பின்பு ராமராயர் காளிதாஸரே உம்முடைய தீர்ப்பென்ன? தராசின் தீர்ப்பைச் சொல்லும் என்று கேட்டார்.

“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
நன்றே மறப்பது நன்று” (108 செய்நன்றி அறிதல்)

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு (423 அறிவுடமை)

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (236 புகழ்)

வேண்டிய வேண்டியாங் கெய்தலான் செய்தவம்
ஈண்டு முயலப் படும் (265 தவம்)

என்ற நாலு குறளையும் சொன்னேன் ஒரே கட்டுரையில் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல் நான்கு திருக்குறளைச் சொன்னவன் பாரதி.

தராசு – காளிதாஸன் சுதேசமித்திரன் 11.12.1915 பக்கம் 8.

மத விஷயங்கள் என்பவை **பாரமார்ந்திக** உண்மைகளாகும். ஞானம், பக்தி, யோகம் எனும் வழிகளிலே கிடைப்பனவாகும். இவற்றை நம்முன்னோர் பெரிய பாடு பட்டுத் தேடி தம்முடைய நூல்களிலே திரட்டிவைத்திருக்கிறார்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு உலகத்தாருக்கெல்லாம் வாரிக் கொடுத்து இவ்வுலகத்தில் துன்பங்களையும், சிறுமைகளையும், அறியாமைகளையும் மாற்ற மேன்மைப்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டு,

கல்வி 399

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்" என்கிறார் பாரதி.

புனர் ஜன்மம் சக்திதாஸன் – சுதேசமித்திரன் – 29.11.1915 பக்கம் 7,8 இல் பாரதி எழுதுகிறார்.

ஆர்யஸம்பத்து

ஸம்பத்து சமஸ்கிருதச் சொல் பொருள் செல்வம் ஆகும். காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம் ஹிந்தி பாஷையிலே துளஸி தாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம் சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி இவையனைத்திற்கும் பொதுப் பெயராவது ஆர்யஸம் பத்து

இந்த 'ஆர்யஸம் பத்தை' உலகமுள்ளவரை ஸம்ரட்சனை செய்து மேன்மேலும் ஒளியும் சிறப்பும் உண்டாகும் படி செய்யும் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கடமையாகும்.

இதுவும் பாரதி எழுதியதுதான்.

சில கவியரசர் காளிதாஸன் சுதேசமித்திதரன் 10.7.1916 பக்கம் 9 போத்தன்னா என்ற தெலுங்குக் கவிராயர் உபதலைப்பு கம்பன் – திருவள்ளுவர் – இளங்கோ.

தமிழ்நாட்டில் இப்போது புதிய உயிர் தோன்றி இருப்பதால் நாம் இவ்விஷயத்தில் தமோ குணம் செலுத்தாமல், கம்பன், இளங்கோ, திருவள்ளுவர். முதலிய மஹாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோற்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(பாரதிக்கு அப்போது கிடைத்த தகவல் அது)

திருவள்ளுவர் மைலாப்பூரிலே பிறந்தவர் அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போதும் இருக்கிறது. ஜன்மதினம் நிச்சயமாகத் தெரியவில்லை. அந்தக் கோயிற் பூஜாரிக்குத் தெரியக்கூடும். (வள்ளுவர் பிறந்தது தென்பாண்டி நாட்டில்)

செய்யத்தக்கது

மைலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக்கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழைநிலைமையிலிருக்கிறது. இந்த மஹான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும்.

ஜப்பானியக்கவிதை சி. சுப்பிரமணியபாரதி சுதேசமித்திரன் 18.10.1916 பக்கம் 9.

சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் ஜப்பானியக் கவிதையின் விஷேசத்தன்மை யென்று நோகுச்சிப் புலவர் சொல்வதுடன் ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர் மாறாக நிற்கிற தென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது கடுகைத் தொளைத்தேழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்த குறள்.

கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான் தமிழ்நாட்டில் முற்காலத்திலே இதுமிகவும் மதிப் பெய்தி நின்றது. ஆளுலும் ஒரேயடியாகக் கவிதை சுருங்கியே போய் விட்டால் நல்ல தன்று.

ஜப்பானிலே கூட எல்லாக் கவிதையும் '**ஹொக்கு**' (17 அசை கொண்டது) பாட்டன்று உயோரே நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மையிருக்கிறது.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு' (அறிவுடைமை 423)

குடிப்பாங்கு – காளிதாஸன் பெயரில் சுதேசமித்திரன் 2.2.1917இல் இதே குறளை மீண்டும் மேற்கோள் காட்டி எழுதியுள்ளார் பாரதி.

நாற் குலம் சாதுர் வர்ண்யம்

சுதேசமித்திரன் 18.1.1917 பக்கம் 3 குணத்தாலும் தொழிலாலும் ஏற்படுகிற மேன்மையைக் கண்டு யாரும் பழிகூற இடமில்லை குணத்திலும் தொழிலிலும் கடைப்பட்ட ஒருவன் பிறப்பைக் காரணமாக வைத்துக் கொண்டு "நான் மற்றவரைக் காட்டிலும் உயர்ந்தவன்" என்று சொல்லும் போது மற்றவருக்குக் கோப முண்டாகிறது.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்

(நீத்தார் பொருமை 26)

என்று தாம் வள்ளுவர் மரபில் பிறந்தாலும் நமது முன்னோரால் பிரமதேவனுடைய அவதார மென்று போற்றப்பட்ட திருவள்ளுவ நாயனார் சொல்லுகிறார் என்று சக்தி தாஸனாக பாரதி எழுதுகிறார்.

தொழில் வசனத் திரட்டு ஆர்ய பத்திரிகை ll விளக்கம் காளிதாஸன் என்ற பெயரில் பாரதி, சுதேசமித்திரன் 5.3.1917 பக்கம் 3 சோம்பேறியின் மனத்தைக் கவலைகள் சூறையாடுவது போல் அவனுடம்பை வியாதிகள் சூறையாடுகின்றன. முயற்சியினாலே செல்வம் வருமென்றும் முயற்சியில்லா விட்டால் வறுமை வருமென்றும் திருவள்ளுவர் சொல்லுகிறார்.

கடற்பாலத்தில் வர்ணாசிரமதர்மசபை – காளிதாஸன்

சுதேசமித்திரன் 17.4.1917 பக்கம் 6

சபையின் விவரம்

1. *சக்கரவர்த்தி சேஷய்யங்கார்*
2. *காளிதாஸன்*
3. *ஒரு செம்படவன் (ர்)*
4. *ஒரு கிழப் பறையன் (ர்)*

சபை கூடிய இடம் வேதபுரத்துக் கடற் பாலத்திலே கீழோரத்தில் தோணி நிழல்

கிழச் சாம்பான் சொல்கிறான்,

சாமிகளே நான் பஞ்சம ஜாதி என்பெயர் லட்சுமணன். பிராமணரே எங்களுக்கு குரு முன்பொரு மாட்டுக் கொட்டகையில் எங்கள் தாயாகிய ஆதியைப் பகவன் என்ற **பிராம்மணன்** மனைவியாகச் செய்து கொண்டான் பிராம்மண ஜாதி எங்களுக்குத் தகப்பன் முறை ......

ஒரே தேசத்தில் பிறந்து ஒரு மதத்தைச் சேர்ந்து ஒரே கூட்டமாக இருக்கும் ஹிந்துக்கள் ஒருவரோடு ஒருவர் அன்போடு இருக்க வேண்டாமா? எங்கள் ஜாதிக்காரருக்குச் சோறும் துணியும் நேரே கிடைத்து வருகிறதா? எந்தத் தொழில் செய்து பிழைத்தாலும் தெய்வபக்தி இருந்தால் இஹத்தில் மேன்மையும் பரத்திலே மோட்சமும் உண்டு. திருவள்ளுவர் எங்கள் குலத்திலே வளர்ந்தார் என்று எழுதுகிறார் பாரதி.

பாரதி வாழ்ந்த காலத்தில் கிடைத்த வள்ளுவர் குறித்த புனைவுகள் கபிலரகவல் போன்ற கட்டுக்கதைகள் இளமையில் காசியில் வாசம் செய்தவன் பாரதி எல்லாம் சேர்ந்து கொண்டது. நூற்றாண்டுகளுக்கு முன்பு சென்று பாரதியை நாம் காணவேண்டும். 2022 இல் இருந்து 1917ஐ பார்த்திடல் சரியாகாது. காலம், சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஜாதிக்குழப்பம்

1920 ஜூன் 9 சுதேசமித்திரனில் பாரதி எழுதுகிறார். இங்ஙனமே சில தினங்களின் முன்பு வள்ளுவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கூட்டங்கூடித் தாங்கள் உயர்ந்த ஜாதியாரென்றும் மற்றும் பறையர்களைத் தொடக்கூடாதென்றும், அவர்களுக்குப் பஞ்சாங்கம் முதலியன சொல்லக்கூடாதென்றும் அவ்வாறு செய்யும் வள்ளுவர்கள்க் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் துண்டுப்பத்திரிக்கைகள் போட்டிருந்தார்களாம்.

இதைக் கண்டு மனம் பொறுக்காமல் வள்ளுவ குலத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் வி.எல். பெருமாள் நாயனார் என்பவர்

வள்ளுவர் பறையரே, பஞ்சமரே என்பதை மிகவும் தெளிவான ரூஜுப்படுத்தி சென்ற வியாழக்கிழமை *(3.6.1920)* சுதேசமித்திரனில் ரஸமான வியாஸமொன்று எழுதியிருப்பதைக் கண்டு என் மனம் சாலமகிழ்ச்சியாகிற்று. இதுவும் பாரதி எழுதியதுதான்! ஆனால் அதன்பின் பாரதி ஓரிடத்தில், பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, திருவள்ளுவர், கபிலர், பரணர், உப்பை, உறுவை, வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபய குலத்துக்கும் நீங்காத கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை.

கோயிற் பேரிகை

ஒரு கிழச் சாம்பான் என்னிடம் வந்து பறையென்பது ஹிந்துதர்மத்தில் **கோயிற் பேரிகை யென்றும்** அதைக் கொட்டுவோன் பறையன் என்றும், **பறையென்பது சக்தியின் பெயரென்றும், அவளே ஆதியென்றும் சிவனே பகவன் என்றும் பிராமண ரூபங்** கொண்டு அவளுடன் வாழ்ந்தான் என்னும் பறையர் மேன்மைப் பட்டால் பார்ப்பார் வேளாளர் , முதலியார், செட்டியார் முதலிய இதர ஜாதியாரும் மேன்மையடைவார்கள் என்றும் பலவித நீதிகளைச் சொன்னான். (பாரதியார் கட்டுரைகள் சமூகம் பாரதி பிரகாலாயம் சென்னை 1940 பஞ்சமர், பக்கம் 560–561) என்றும் பறையர் குலத்தை உயர்த்தி எழுதியிருக்கிறார் பாரதி.

ஓரிடத்தில் முரண்போலத் தோன்றும் பிறிதோர் இடத்தில் அதற்கு விளக்கத்தை வள்ளுவர் திருக்குறளிலேயே தருவார்.

ஊழிற்பெருவலி யாவுள? ஊழ் (380)
ஊழையும் உப்பக்கம் காண்பர் (ஆள்வினை உடமை 620)

40 வது அதிகாரம் கல்வி பொருட்பால்
111வது அதிகாரம் புணர்ச்சி மகிழ்தல் காமத்துப்பால்
'அறிதோறறியாமை கண்டற்றால்'

சான்று அறத்துப்பால், பொருட்பால் குறள் முழுவதையும் காண்பதுபோல் பாரதி எழுத்துக்கள் முழுவதையும் படித்தறிய வேண்டும். அப்போதுதான் உண்மை நிலையை உணர முடியும்.

1917–க்கு பிறகு பாரதி கவிதை படைப்பதில் நாட்டம் கொண்டதாகத் தெரியவில்லை. சுதேசமித்திரனில் பணியாற்றுகிறார் அப்போது 26.5.1917இல் ரத்னமாலை என்ற கட்டுரையில்,

“யாகாராயினும் நாகாக்க”

“சொல்லிற் பயனுடைய சொல்லற்க”

என்னும் குறள் வரிகளை மட்டும் இறுதியில் தந்துள்ளார்.

தெலுங்குமஹாசபை

சுதேசமித்திரன் 9.6.1917 பக்கம் 7 தமிழில் அபிமான முள்ளவன் ஹிந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பான். அதுவே தமிழபிமானியைச் சோதிக்கும்வழி. ஏனென்றால் தேவாரத்திலும் திருவாசகத்திலும் திருவாய்மொழியிலும் திருக்குறளிலும் கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபி மானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை. சக்திதாஸனாக நின்று பாரதி முழங்குகிறான்.

16.4.1918 சுதேசமித்திரனில் தேசீயக் கல்வி கட்டுரையில் குடும்ப வாழ்க்கையின் பிறப்பு பற்றி பாரதி குறிப்பிடுகையில்

“இல் வாழ்வான் என்பான் இயல்புடை மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை” என்றார்.

(இல்வாழ்க்கை குறள் 41)

9.2.1920 சுதேசமித்திரனில் உலகவிநோதங்கள் பகுதியில் காளிதாஸனாக பாரதி

நன்றி மறவாமை குறித்து எழுதியிருக்கிறார்

‘தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு’

என்றார் வள்ளுவர்.

17.6.1920இல் சுதேசமித்திரனில்

‘எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு’

அறிவுடைமை 423

குறளை மீண்டும் எடுத்தாண்டுள்ளார் பாரதி.

3.6.1920 வாசக ஞானம் சுதேசமித்திரன் கட்டுரை சி. சுப்பிரமணிய பாரதி எழுதுகிறார். உண்மையை உலக நீதி விஷயத்தில் ஏற்கும் படி திருவள்ளுவர்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

664 வினைத்திட்பம்

என்ற குறளால் உணர்த்துகிறார்,

இதன் பொருள் வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சொல்லின் படி நடத்தல் மிகவும் துர்லபம் என்பது.

"இன் சொல் இனி தீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது (இனியவை கூறல் 99)

என்ற குறளின் படி இனிய சொறகள் சொல்வதினிலும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கொருவர் கொடுஞ்சொற்கள் வழங்குவது மடமை என்பது உலகத்தில் சாதாரண அனுபவமுடையவர்களுக்கெல்லாம் தெரியும். அங்ஙனம் தெரிந்தும் கொடுஞ் சொற்களும் கோபச் செயல்களும் நீக்கியவர்களை உலகத்திற் தேடிப்பார்த்தல் காண்பது அரிதாக இருக்கிறது என்கிறார் பாரதி.

தமிழ் நாட்டு நாகரிகம்

6.3.1920 சி. சுப்பிரமணிய பாரதி சுதேசமித்திரனில் எழுதுகிறார். ஆண்மக்களிலே கூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜனஸமுஹ விதாயங்களில் வள்ளுவர் குறள் நாலடியார் முதலியவற்றைப் பிரமாணமாகக் கூறுவர். இம்மாதிரியாக பெருமைப்படுத்தி திருவள்ளுவரைச் சொல்லாம்.

புருஷார்த்தங்கள் அதாவது மானிட ஜன்ம மெடுத்ததினின்றும் ஒருவன் அடையக் கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடென்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத தாகையில் அதனை விரித்துக் கூற முயலாமல், அதற்கு ஸாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதலத்தியாயத்தில் கூறி நிறுத்தி விட்டு மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கித் திருவள்ளுவ நாயனார் 'முப்பால்' என்ற பெயருடைய

திருக்குறள் செய்தருளினார். ஆராய்ந்து முந்நூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனார் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கையென்று கருதப்பட்டது.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்துற்றறியும் இவ்வைந்தும்
ஒண்டொடி கண்ணேயுள"

(புணர்ச்சிமகிழ்தல் 1101)

காண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் என்ற ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளி பொருந்திய வளையணிந்த பெண்ணிடத்தே தானுளது என்பது அக் குறளின் பொருள் என்று 6.3.1920 சுதேசமித்திரனில் தமிழ்நாட்டு நாகரீகம் எனும் அதே கட்டுரையில் திருக்குறளையும் கூறி அதற்குரிய பொருளையும் எழுதியவன் பாரதி.

விநோதக் கொத்து காளிதாஸன் என்ற பெயரில் பாரதி எழுதுகிறார்.

காற்றை விதைத்துப்புயற் காற்றை அறுப்பது

காற்றை விதைத்துப்புயற் காற்றை அறுப்பது என்ற கட்டுரையில் 22.11.1920 சுதேசமித்திரன் பக்கம் 6.

'கடுகைத் தொளைத் தேழ்கடலைத்திணித்துக்
குறுகத்தரித்த குறள்'

என்று நம் முன்னோர் திருக்குறளைப் பற்றி வியந்து பேசியிருக்கிறார்கள்.

அதாவது ஒரு சிறிய கடுகைத் தொளை செய்து அதற்குள்ளே எழு கடலைத் திணிப்பதுபோல் மிகவும் வடிவு குறுகிய குறட்பாட்டுக்குள் அதி விஸ்தாரமான அர்த்தங்களைத் திருவள்ளுவர் புகுத்தியிருக்கிறாரென்றவாறு என்கிறார் பாரதி.

செல்வம், சி. சுப்பிரமணியபாரதி, 23.4.1920 சுதேசமித்திரனில், பணமில்லாதவன் பிணம் என்று பழமொழி சொல்கிறது இதே கருத்தத்தைத்தான் திருவள்ளுவர் வேறொரு வகையிலே பொருளில்லார்க் இவ்வுலகமில்லை (குறள் 247) என்று சொல்லி இருக்கிறார்.

மூன்று குறள்கள்

ஐந்து குறள்களை ஒரே இடத்திலும் நான்கு குறள்களை ஒரே இடத்திலும் சொன்ன பாரதி மூன்று குறள்களை 8.5.1920 சுதேசமித்திரனில் செல்வம் எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

விலங்கொடுமக்களனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர் (410 கல்லாமை)

அதாவது மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறதோ, அத்தனை பேதம் கற்றாருக்கும் கல்லாதார்க்கும் இடையே உள்ளது. இந்தக் குறள் கல்விப் பெருமையுடையோர் அஃதில்லாதாரின் விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை நன்கு விளக்குகிறது.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்
(கல்வி 393)

என்று வள்ளுவர் சொல்லியபடி படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாகக் கருதி நடத்துகிறான்.

இன்னும் வருவது கொல்லோ, நெருநலும்
கொன்றது போலு நிரப்பு
(நல்குரவு 1048)

என்று திருவள்ளுவர் சொல்லியது போலே அதாவது நேற்று முழுவதும் நம்மை கொலை செய்வதுபோல வருந்திக் கொண்டிருந்த வறுமை இன்றைக்கும் வந்துவிடுமே என்று பரிதபித் தேங்கும் நிலைமையில், நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என்கிறார் பாரதி.

விண்ணப்பமும் வினோத கதையும் ஸமத்வஸ்தாபனம் சுதேசமித்திரனில் 27.3. 1920 இல் பாரதி எழுதுகிறார்.

"பொருட் பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீ இயற்று"
(வரைவின் மகளிர் 913)

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

அதாவது. காதலை ஆதாரமாகக் கொள்ளாமல் பொருளை மாத்திரமே ஆதாரமாகக் கொண்ட வேசையரின் கூட்டுறவு ஒரு இருட்டறையில் முன்பின் தெரியாத பிணத்தைத் தழுவிக் கொள்வதற்கு நிகராகும் என்பது கருத்து.

சங்க இலக்கியங்களில் பரத்தமை காணப்படும்.

திருக்குறளில் 'பரத்தமை' கிடையாது. ஆனால் இக்குறளுக்கு உரை சொன்ன பாரதி 'வேசையர் பற்றி பேசுகிறார்.

'இல்லை தவறு அவர்க்கு'

வள்ளுவரின் தலைவன் (ஊடல்உவகை 1321)

'இல்லை தவறு அவர்க்கு' குற்றம் இல்லாதவன் என்பதை எண்ணியாக வேண்டும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாதுஉ ஞற்று பவர் (ஆள்வினையுடைமை 620)

அதாவது உள்ளத்திலே சலனமும் சோர்தலுமில்லாமல், முயற்சி செய்தால், உளழின் பொது விதியைக் கூட வென்று விடலாம் என்பது கருத்து.

இரண்டு குறள்கள்

'வருந்தினால் வாராதாதென்றுமில்லை' என்கிறான் பாரதி. ஒரே கட்டுரையில் இரண்டு திருக்குறளை எடுத்தாண்டுள்ளான் பாரதி.

வாசகஞானம் – சுதேசமித்திரன் 3.6.1920இல் இதே உண்மையை உலகநீதி விஷயத்தில் ஏற்கும் படி வள்ளுவர்,

"சொல்லுதல் யார்க்கு மெளிய – அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்" என்ற குறளால் உணர்த்துகிறார் என்கிறான் பாரதி.

இதன் பொருள் வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யார்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சொல்லின் படி நடத்தல் மிகவும் துர்லபம் என்பது. (664 வினைத்திட்பம்)

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ
வன்சொல் வழங்குவது" ...

(இனியவைகூறல் 99)

என்ற குறளின்படி இனிய சொற்கள் சொல்வதினின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கொருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடமை.

பாரதி திருக்குறள் முழுமைக்கும் உரைதந்திருந்தால் உரையாசிரியர் பட்டியலிலும் இடம் பிடித்திருப்பார் நமக்கும் நல்லதோர் உரை கிடைத்திருக்கும்.

ஸ்ரீ ரவீந்திரதிக் விஜயம் சுதேசமித்திரன் 25.8.1921. காலக் குறிப்புக்கும் கட்டுரைக்கும் பாரதி தமிழ் பக்கம் 482-487 (1953)

ஆஸ்த்ரியா தேசத்தில் பாரத கவிராஜ ரவீந்திரருக்கு நடந்த உபசாரங்கள் வர்ணிக்கத்தக்கன அல்ல.

ஆஹா இஃதன்றோ கீர்த்தி இதனைக் குறிப்பிட்டன்றோ முன்பு திரு வள்ளுவனாரும் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார்; என்கிறான் பாரதி.

சந்திரிகையின் கதை

பாரதியார் எழுதிய ஒரே சமூக நாவல் சந்திரிகையின் கதை பாரதி பிரசுரலாயம் எட்டு அத்தியாயங்களையும் ஒன்பதாவது அத்தியாயத்தின் ஒரு பாராவையும் வெளியிட்டது. பாரதி ஆய்வாளர் ரா.அ. பத்மநாபன் இரண்டு அத்தியாயங்கள் அறிஞர் வெங்களத்தூர் சாமிநாதசர்மாவிடமிருந்து பெற்று தனது பாரதி புதையலில் தந்தார்.

உணலினும் உண்டது அறல் இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது

(ஊடலுவகை 1326)

மஹாகவி திருவள்ளுவதேவர்

என்றன்றோ ஸாட்ஸாத் பிரமதேவனுடைய அம்சபூதரும் மஹாகவியுமாகிய திருவள்ளுவதேவர் அருளியிருக்கிறார்.

திருவள்ளுவரை மகாகவி என்று பாரதி போற்றுமிடம் இது. நான்முகனே மறைந்து வள்ளுவனாக வந்து அவதரித்தான் என்பது வைதிகப் புலவர் ஒரு வரின் வாக்கு; (இராமநாதபுரத்து தமிழ் அறிஞர் இராகவய்யங்காரின் கூற்று) பாரதியும் அதனை அப்படியே ஏற்று எழுதியுள்ளார்.

செயற்கறிய செய்வள் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலாதார் (பாரதி கட்டுரை பக் 559)

பல இடங்களில் குறளைத் தழுவிச் செல்லும் பாரதி ஓரிடத்தில் பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம் நாஸ்திகர்கூட, இஷ்டதெய்வமில்லா விட்டாலும் வெறுமே தியானம் செய்வது நன்று.

'உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்' என்பது குறள் என்று குறிப்பிடுகிறார்.

நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதினும்

பெயக் கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர் (580 கண்ணோட்டம்)

இதனையே பாரதி

நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லை என்கிறார்.

(மாதா மணிவாசகம் 1914 பண்டாரப் பாட்டு)

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"
(34அறன் வலியுறுத்தல்)

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (39 அறன் வலியுறுத்தல்)

அறம் ஒன்றே தரும் மெய்யின்பம் என்ற
அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்.

கனவு ஆகஸ்ட் 1910 – பாரதி சொல்கிறான்.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்

யாதொன்றும் கண்பாடு அரிது". (நல்குரவு 1049)

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு
வாழும் மணி தருக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

முரசு சுதேசமித்திரன் 6.4.1916

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (இரவச்சம் 1062)

இனி ஒரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்

தனி ஒரு வனுக்கு உணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

பாரத ஸமுதாயம் சுதேச கீதங்கள்
முதற்பாகம் ஜனவரி 1922

செய்க பொருளை

"செய்க பொருளைச் செறுநர் செறுக்கறுக்கும்
எஃக தனிற் கூரியதில்"

759 பொருள் சொல்வகை

பொருளில் லார்க்கில்லை இவ்வுலகு என்ற நம்
புலவர் தம் மொழி பொய்ம் மொழி யன்று காண
பொருளில்லார்க்கு இனமில்லை –துணையில்லை
பொழு தெல்லாம் இடர் வெள்ளம் வந்தெற்றுமால்

கனவு ஆகஸ்ட் 1910.

பொருளைத்தேடு உனக்கு அநீதியான
இமிசை செய்வோர்களை
அடக்குவதற்கு இதுபோலக்

கூர்மையுடைய ஆயுதம் வேறே கிடையாது என்பான் பாரதி.

செல்வம் குறித்த கட்டுரையில்
“கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்” 393 கல்வி

என்று வள்ளுவர் சொல்லியபடி படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாகக் கருதி நடத்துகிறான். பணமுடையவனோ பணமில்லாதவனை பிணமாக நடத்துகின்றான் (கட்டுரைகள் சமூகம், பக்கம் 632 (1940).

சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி

“சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி இன மென்னும்
ஏமப் புணையைச் சுடும்”

வெகுளாமை 306

பாரதி அறுபத்தாறு (1923)இல் சொல்வான்
கோனாகிக் சாத்திரத்தை ஆளும் மாண்பார்.
ஜகதீச சந்திரவசு கூறுகின்றான்.
ஞானாறு பவத்தில் இது முடிவாம் கண்டீர்
நாடியிலே அதிர்ச்சியினால் மரணம் என்றான்
கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்.

புதிய உயிர் எனும் 17.3.1916இல் பாரதி தந்த கட்டுரையில் ‘மிகினும் குறையினும் நோய் செய்யும்‘ என்று வள்ளுவரின் மருந்து அதிகாரம் 941 வது குறளை எடுத்தாண்டுள்ளார்.

பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்

பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான் (பெருமை 972)

சாதிகள் இல்லையடிப்பா– குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல்பாவம்

– பாப்பாப்பாட்டு

மானுடர் வேற்றுமையில்லை

முரசுப் பாடலில்
“நிகர் என்று கொட்டு முரசே – இந்த

நீணிலம் வாழ்பவர் எல்லாம்
தகர் என்று கொட்டுமுரசே – பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம்"

"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில்
மானுடர் வேற்றுமையில்லை"

சாதிப்பிரிவுகள் சொல்லி – அதில்
தாழ்வென்றும் மேலென்னும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார் – அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்"

"இல்ல தென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

வாழக்கைக்துணை நலம் 53

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின் 54

சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை 57

6.1.1916 சுதேசமித்திரனில் பாரதி எழுதுகிறார்; (பெண்கள் விடுதலைக் கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி

(சுதேச கீதங்கள் முதற்பாகம் ஜனவரி 1922விடுதலை)

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
ஆண்களோடு பெண்களும் சரிநிகர்
சமானமாக வாழ்வம் இந்தநாட்டிலே.

மூடபக்தி என்ற கட்டுரையில் வள்ளுவரின் தீ நட்பு 819 வது குறளை பாரதி எடுத்தாளுகிறார்.

"கனவினும் இன்னாது மன்னே வினைவேறு
சொல்வேறுடையார் தொடர்பு"
என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

இதன் பொருள் வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வோறாரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீதே என்பதேயாம்.

பாரதி நூல்கள் கட்டுரைகள் தத்துவம் பக்கம் 14 1940

மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பின் மானம் வரின் (969 மானம்)

மானம் சிறிதென்றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர்க்குல கந்தனில் கிளியே இருக்க நிலைமையுண்டோ–
மானம்

துறந்தறம் மறந்தும் பின் உயிர் கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

கிளிக்கண்ணிகள் நடிப்புச் சுதேசிகள்
(பழித்தறிவுறுத்தல் – இந்தியா 1.6.1907, 15.6.1907)

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"
(ஊக்கம் உடமை குறள் 596)

எண்ணுவது உயர்வு – பாரதி

(புதிய ஆத்திசூடி (1913))

சாலைய் இளந்திரையன்

'தமிழனின் ஒரே கவிஞன்' என்னு பாவேந்தர் குறித்து 438 பக்கங்களில் 1991இல் நூல் தந்தவர் சாலைய் இளந்திரையன்.

அவரது புதிய தமிழ்க்கவிதை நூல் 1966இல் 192 பக்கங்களில் வந்துள்ளது. அதில் 'பாரதி பாட்டு', 'பாரதி காதல்; கட்டுரைகள் 27வது பக்கம் முதல் 57வது பக்கம் வரை.

பாரதியுகத்தில் ஒரு புதிய நோக்கம்

" எளிய சந்தம் எளிய நடை, புதிய கருத்து என்ற போக்கில் தமிழ்க கவிதையாளை நடக்கச் செய்த பெருமை சிறப்பாக பாரதிக்கே உரியது. ஆமாம், கடவுள், காதல், யுத்தம், புகழ்ச்சி, நீதி என்ற பாதையில் நெடுங்காலமாக ஓடிய தமிழ்க்கவிதை, பாரதியுகத்தில் ஒரு புதிய நோக்கத்தைப் பெற்றது.

இந்தியப் பாரம்பரியத்தைத் தாய்வழிச் செல்வமாகப் பெற்று, மேலைநாட்டுப் புதிய கவிதை நெறியைச் சுவைபார்த்து தமது கவிதைக்கென்று ஒரு நடுப்பாதை அமைத்துக் கொண்டார் பாரதி.

பழமையின் மலர்ச்சியாக
எளிமையின் வடிவமாக
இன்றையின் தேவை உணர்ந்து
பிறந்த குழந்தையாகத்
தமிழ் மக்களின் முன்னே
தவழ்ந்தது அவருடைய கவிதை

இது தமிழனின் ஒரே கவிஞன் பாரதிதாசன் என்ற தனிப்பெரும் நூலைத் தந்த சாலய் இளந்திரையனே பாரதிகுறித்துப் போற்றி எழுதிய வரிகள் ஆகும். எவ்வளவோ சொல்லலாம்; ஒன்றைச் சொன்னேன்.

"வாளேந்து மன்னர்களும் மானியங்கொள்
புலவர்களும் மகிழ்வாய் – அந்நாள்
தாளேந்திக் காத்த நறுந்தமிழ்மொழியைத்
தாய்மொழியை உயிரை – இந்த
நாளேந்திக் காக்குநர் யார்? நண்ணுநர் யார்?
என்றயலவர் நகைக்கும் – போதில்
தோளேந்திக் காத்தஎழிற்
சுப்பிரமணிய பாரதியார் நாமம் வாழ்க!

– பாவேந்தர் பாரதிதாசன்.

முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண்மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்து உணராது
பலவகையாய்ப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதன் அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்."

மகாகவி பாரதியார் – புதிய ஆத்திசூடி – 1913

. . . .

"தெய்வம் பல பல சொல்லிப் – பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வது அனைத்திலும் ஒன்றாய் – எங்கும்
ஓர் பொருளாவது தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"

– மகாகவி பாரதியார் 'முரசு' 6.4.1916 சுதேசமித்திரன்

முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்

ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண்மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்து உணராது
பலவகையாய்ப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதன் அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்."

- மகாகவி பாரதியார் - புதிய ஆத்திசூடி - 1913

"தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வது அனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளாவது தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்"

- மகாகவி பாரதியார் 'முரசு' 6.4.1916 - சுதேசமித்திரன்

NEWSMAN
Publications

₹ 200

Cover design: PR Rajan